முச்சந்தி முரளி




"புலிகளே இல்லையெண்டிட்டு இப்ப இல்லாத புலிகளுக்கோ தடை போடினம்"


Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39 | கதிர் : 171 | புதன்கிழமை 15 மே 2024 | வைகாசி 02 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை


யாழ்ப்பாணம் - இணுவிலில்

# ஐஸ் போதை மையம்: நேற்று சுற்றிவளைப்பு!



## சந்தேகநபரொருவரும் கைது
## இலங்கையில் 2ஆவது சம்பவம்
## பல கோணத்தில் விசாரணை

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி செய்யப்பட்ட இடமொன்று, யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

15

## நினைவேந்தல் உரிமைகளை ஒருபோதும் இழக்கமாட்டோம்

இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 15

தமிழ் மக்கள் தங்களது உயிர்நீத்த உறவுகளை நினைவேந்துவதற்கான முழுமையான உரிமைகளை உடையவர்கள். அது அவர்களின் அடிப்படை உரிமை

15

## கொக்குவிலில் நகை திருட்டு!

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து நான்கரைப் பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டின் ஜன்னலைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் நான்கரைப் பவுண் நகைகளையும், 25 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

15

## புலிகள் மீதான தடை மேலும் 5 ஆண்டுகள்

இந்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, மே 15

மக்கள் மத்தியில் பிரிவினைவாதப் போக்கினைத் தொடர்ந்து வளர்த்து வருவதோடு, இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளுக்கான

15

## சுமந்திரன் சொல்வது பொய்!

உறுதியாகச் சொல்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், மே 15

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறு எம்.ஏ.சுமந்திரனை நான் ஒருபோதும் கேட்கவில்லை. அவர் கூறியது வெறும் அப்பட்டமான பொய். அது அவரது அதீதமான கற்பனையின் வெளிப்பாடு என சுரேஷ் பிரேமச்சந்திரன் திட்ட

15

## தமிழர்களின் வாக்கு சஜித்துக்கே கிட்டும்

ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, மே 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் தற்போது ஆட்சி செய்கின்றார், அவர் தமிழ் பேசும் மக்களுக்காக என்ன செய்துள்ளார்? எனவே, சஜித்துக்கே சிறுபான்மை

15

## இறுதிப்போரின் போது 7,721 பேரே இறப்பாம்

கொழும்பு, மே 15

இறுதிப்போரின்போது பெருமளவான மக்கள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும். புலிகள் உட்பட 7 ஆயிரத்து 721 பேரே உயிரிழந்துள்ளனர் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கடற்படை அதிகாரியுமான சரத்

15

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: உதயனில் மே 17 இல் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 15

உதயன் பணிமனையின் தலைமைக் காரியாலயத்தில் நாளைமறுதினம் 17ஆம் திகதி குருதிக்கொடை முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முள்ளிவாய்க்காலில் கொன்றுகுவிக்கப்பட்ட உறவுகளின் நினைவாகவும், அவர்களை அஞ்சலிக்கும் விதமாகவுமே இந்தக் குருதிக்கொடை முகாம் முன்னெடுக்கப்

15

ஆரோக்கியமான சிறுமிக்கு

## சிறுநீரகப் பாதிப்பு என பொய்சொல்லி யாசகம்

தந்தை விளக்கமறியலில்

15



## இலங்கையின் ஒற்றையாட்சியை பேணுவதில் இந்தியா அர்ப்பணிப்பு!

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

கொழும்பு, மே 15

இலங்கையில் ஒற்றையாட்சியைப் பேணுவதற்கு இந்தியா அர்ப்பணிப்புடன் செயற்படும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார். ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், சந்தோஷ் ஜா மேலும் தெரிவித்ததாவது:-

15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தயக் குதிரைகளாக மாற்றப்படும் மாணவர்

## வடக்கு பிரதம செயலாளர் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், மே 15**

**இன்றைய கல்விப்புலம் மைதானமாக மாறியுள்ளது. மாணவர்கள் அதில் பந்தயக் குதிரைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வாழ்க்கையை எதிர்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் கொண்டவர்களாக மாற்றப்படவில்லை.**

- இவ்வாறு வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர்சு.வித்தியானந்தனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் அரங்கில் நடந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிரேக்கத்தில் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டிஸ் போன்ற பேரறிஞர்கள் ஒரு கல்விப் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பியது போன்று பேராசிரியர். வித்தியானந்தன் எமது மண்ணில் கல்விப் புலத்தில் ஒரு வரலாற்றை உருவாக்கித் தந்துள்ளார். வடக்கு -கிழக்கு மலையக மக்களை இணைத்துச் செயற்பட்ட ஒருவராகவும் அவர் விளங்குகின்றார் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார். (எ-66)



# புலவைத் திறக்கக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

மன்னார், மே 15

சிறுபோக நெற்செய்கைக்காக நெடுங்கண்டல் புலவைத் திறக்கவேண்டும் என்று கோரி, மாந்தை மேற்கு விவசாயிகள் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2023ஆம் ஆண்டின் புலவுப் பங்கீட்டில் தனிப்பட்ட நபர் ஒருவருடனான முரண்பாட்டுக்கு பழிதீர்க்கும் வகையில் நெடுங்கண்டல் புலவு பூட்டப்பட்டுள்ளது. விவசாய நடவடிக்கைக்காக அந்தப் புலவைத் திறக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், ரெலோக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன்ராஜ், மன்னார் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் முஜாகிர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-56)

# வாகன விபத்து; ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம், மே 15

ஹைஏஸ் வாகனத்துடன் சிறைச்சாலை வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் ஹைஏஸ் வாகனச் சாரதி ஊர்காவற்றுறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து ஊர்காவற்துறை நாராந்தனை பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் ஆட்டு மந்தை குறுக்கே வந்ததால் சடுதியாக நிறுத்தியுள்ளது. இதன்போது பின்னால் வந்த சிறைச்சாலை பேருந்து, ஹைஏஸுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. (ச-125)



# யாழ்ப்பாணத்தில் ஜெரால்ட் ரிபெல்லி

ஐக்கியநாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஜெரால்ட் ரிபெல்லி, மூன்றுநாள் உத்தியோகபூர்வ பயணமாக, யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வந்துள்ளார்.

அவர் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபனை, யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் 'Food for Assets' செயற்றிட்டத்தின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் மற்றும் மேற்படி செயற்றிட்டம் குறித்து எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

சந்திப்பில் உலக உணவுத் திட்ட அரசாங்கப் பங்குடமை அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத்திட்டப் பொறியியலாளர் டபிள்யூ.எ.சந்திரதிலக, யாழ்.மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வ.தர்சினி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ப-66)

# காலநடைகளால் சிறுபோகம் பாதிப்பு

## விவசாயிகள் விசனம்

கிளிநொச்சி, மே 15

கிளிநொச்சி, கல்மடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறுபோகச் செய்கை கட்டாக்காலி கால்நடைகளால் பாதிக்கப்படுகின்றது என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிறுபோகச் செய்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ளபோதும், கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதில் கமக்கார அமைப்புகள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-113)



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு, தாதியர்களைக் கௌரவிக்கும் முகமாக தாதியர் தின நிகழ்வு மன்னார் பொது மருத்துவமனை தாதியர்களின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. (எ-213-56)

# மன்னாரில் காணிப் பதிவு

மன்னார், மே 15

20 இலட்சம் காணி உறுதிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், காணிகளைப் பதிவு செய்யும் நிகழ்வு மன்னார் சாந்திபுரம் மற்றும் சௌத்பார் கிராமங்களில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

அரசகாணிகளில்நீண்ட காலமாக வசிக்கும் மக்களுக்கு காணி உரிமைகளை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

தற்காலிக காணி ஆவணங்களைக் கொண்டுள்ள காணி உரிமையாளர்கள், அந்தக் காணிப்பத்திரத்தின் மூலப்பிரதி, பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ், அடையாள அட்டைப்பிரதி என்பவற்றைச் சமர்ப்பித்து பூரண அளிப்புக்கான பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-56-213)

# வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 15

வல்வெட்டி வேவில் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வன்னிச்சியம்மன் ஆலயத்தில் வேட்டைத் திருவிழாவும் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை வசந்தமண்டப பூசை 9.30 மணிக்கு இடம்பெற்று முற்பகல் 11.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.

மறுநாள் காலை 8.30 மணிக்கு வல்வை ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கனிய மணல் அகழ்வுக்கு மன்னாரில் அனுமதி மறுப்பு

அவுஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'டைட்டானியம்' நிறுவனத்தால் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள கனிய மணல் அகழ்வுத் திட்ட மதிப்பீட்டுக்கு மாவட்டச் செயலகம் அனுமதி மறுத்துள்ளது.

சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் பொதுமக்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்ள விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் இந்த நிறுவனத்தால் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகள்,சமூக மட்ட அமைப்புகள், திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்துக்கு மக்கள் ஆதரவு வழங்காத நிலையில், சுற்றுச்சூழல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கமுடியாது என்றும் இங்கு திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாததன் காரணம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்தப்படவுள்ளது என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ச-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரம் காப்பது கட்டாயம்!



## அமெ.உதவிச் செயலர் வலியுறுத்து

**கொழும்பு,மே 15**

**ஜனநாயக நாடான இலங்கையில் கருத்துச்சுதந்திரம் பேணப்பட வேண்டியமை கட்டாயமாகும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச்செயலர் டொனால்ட் லூ வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கை வருகை தந்துள்ள அவர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போதே இலங்கையின் பொருளாதார மீட்சிக்கும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் அமெரிக்கா தொடர்ந்து உதவும் என்று தெரிவித்த அவர், கருத்துச்சுதந்திரம், புனர்வாழ்வு என்பவற்றின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

சிவில் சமூகக் குழுக்களின் பிரதிநிதிகளான மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, தேசிய சமாதானப் பேரவைப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா மனித உரிமைகள்சட்டத்தரணிஅம்பிகா சற்குணநாதன், ஆகியோர் சந்திப்பில் உடனிருந்தனர். (ச-6)




## பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகப் போராட்டம்

கொழும்பு, மே 15

பலஸ்தீனத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (எ-இ)

## மறியல் கைதிகளின் தண்டனை குறைப்பு

புதிய தண்டனை திருத்தச் சட்டத்தின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் காலத்தைக் கழித்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்கு நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். சில கைதிகள் தடுப்புக்காவலிலும், மேல் முறையீட்டின்போதும் அதிக காலத்தைக் கழிப்பது தெரியவந்துள்ளது. அதற்கமைய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழுவால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதுடன் நாடாளுமன்றமும் இதனை அங்கீகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## 80 வயதில் பரீட்சை எழுதிய முதியவர்!

கொழும்பு, மே 15

தற்போது நடைபெற்றுவரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 80 வயது முதியவர் ஒருவர் கணித பாடத்தில் தோற்றியுள்ளார். பாணந்துறை, கிரிபெரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே பரீட்சையில் தோற்றியுள்ளார். இவர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## பௌத்த புனித நகராக குச்சவெளி அறிவிப்பு!

2 வீத சிங்களவர்களைக்கொண்ட குச்சவெளிப் பிரதேசம் பௌத்த புனித நகராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு முதல் மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் குச்சவெளியில் விகாரைகள் அமைக்கும் பணியை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளன. 2002 ஆம் ஆண்டு முதல் இன்று வரை குச்சவெளியில் 32 விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்போது அங்கு விகாரை ஒன்றும் மடாலயமும் அமைந்துள்ள பிரதேசமும் புனித நகராக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. சாந்தி விகாரை, ஸ்ரீ சட்டர்ம யுக்திக வணசெனசனுவா மடாலயம், யன் ஓயா ராஜமகா விகாரை என்பன அமைந்துள்ள பிரதேசமே புனித நகராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ம-6)

## கிராமஅலுவலர்கள் போராட்டம்

நேற்றுமுதல் 3 நாள்களுக்கு சுகவீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்று இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கிராமஅலுவலர்கள் சேவையை அரசமைப்பில் அங்கீகரித்தல் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (எ-இ)

## விளையாட்டுப் பயிற்சியாளர் நியமனங்கள் விரைவில்

பாடசாலைகளில் விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்களாக தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் உரிய தகைமை இல்லாதவர்களே விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்களாக நியமிக்கப்பட்டு வந்துள்ளனர். தற்போது 3 ஆயிரம் பயிற்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்களை சேவையில் இணைக்கவுள்ளோம்.

அதேவேளை 500 ஆங்கில ஆசிரியர்கள் புதிதாக சேவைக்காக நியமிக்கப்படவுள்ளனர். இவர்களில் 400 பேர் மாகாணப் பாடசாலைகளுக்கும், 100 பேர் தேசியப் பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படவுள்ளனர். 2021 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-6)



## புதினம் தெரியுமோ?

**திரை கடலோடியும் திரவியம் தேடுறதை விடவும், அக்கரைப் பச்சை ஆசையைக் காட்டி இக்கரையில இருந்தே கோடிக்கணக்கில சுருட்டுறதுதான் இப்ப சுகமான வழி. ஏமாறுற ஆக்கள் இருக்கிறவரைக்கும் ஏமாத்துறவையும் இருக்கத்தானே செய்யினம். உந்தப் பொருளாதார நெருக்கடி வந்தபிறகு இஞ்ச இருந்து வெளிநாட்டுக்குப் போற ஆக்களின்ர தொகை கூடிப் போட்டுது. எங்க திரும்பினாலும் வெளிநாட்டுக்குப் போற கதையள் தான். இப்பிடி தாங்கள் வெளிநாட்டுக்குப் போக 'ட்ரை' பண்ணுறம் எண்டதை ஒரு பெருமையாச் சொல்லுறவையும் இப்ப கூடிப்போச்சினம். ஆனால் அந்தப்பெருமைக் கதையை வைச்சுத்தான் அவைக்கு தூண்டில் போடுற விளையாட்டும் நடக்குது. விதவிதமான ஏமாத்துகளில ஒரு வித்தியாசமான ஏமாத்து கிட்டடியில பிடிபட்டது.**

**யாழ்ப்பாணத்தில இருக்கிற ஒரு சர்வதேச ரீதியான தொண்டு நிறுவனங்களில அதுவும் ஒண்டு. சனங்களுக்குச் சேவை செய்யவெண்டு சமூகத்தில 'சிங்கம்' மாதிரி இருக்கிறவையைச் சேர்த்து இந்தத் தொண்டு நிறுவனம் கனபேருக்கு நிறைய உதவியளைச் செய்து கொண்டு வருகுது. சமூகத்தில பெரும் மட்டங்களில இருக்கிறவையள் இப்பிடியான அமைப்புகளில இருக்கிறதை ஒரு கௌரவமாவும் நினைக்கிற அளவுக்கு இந்தத் தொண்டு நிறுவனங்களைப் பற்றி சனத்திட்டையும் நல்ல அபிப்பிராயம் இருக்கு. அப்பிடியான சங்கத்துக்கு ஒரு கரும்புள்ளி மாதிரி ஒரு அம்மணி பெரும் விளையாட்டுக் காட்டிப் போட்டா. அந்த அமைப்பில தங்கட கிளையில இருக்கிற இளம் ஆக்களிட்டையும், அந்த தொண்டு நிறுவனம் பற்றி அறிஞ்சவையிட்டையும் 'எங்கட நிறுவனம் வெளிநாட்டு கூட்டத்துக்கு ஆக்களை அனுப்புது. அப்பிடி எங்கட நிறுவனத்தின்ர சார்பில போறமாதிரி உங்கட பேரைப் பதிஞ்சு அனுப்பலாம்' எண்டு முதலாவது தூண்டிலை அவா போடுவாவாம்.**

**அதுக்கு ஆரும் நாக்கைத்தொங்கப்போட்டுக்கொண்டு 'அப்பிடியோ? எவ்வளவு காசெண்டாலும் தரலாம். என்னையும் அனுப்பி விடுங்கோ' எண்டு கையில காசோட வந்திடுவினமாம். ஆனால் அந்த அம்மணி தன்னை லேசில காட்டிக்குடுக்க மாட்டா. 'இதெல்லாம் தொண்டு. காசுக்காக செய்யிற ஆள் நானில்லை. உங்கட போக்குவரத்து, தங்குமிடம், விசா எண்டு ஒரு பதினைஞ்சு லட்சம் செலவாகும், அதைமட்டும் கட்டினால் காணும். அப்பிடியே கனடா தான்' எண்டு வெள்ளையும் சொள்ளையுமாக் கதைக்க, எல்லாரும் அதை நம்பிடுவினம். பதினைஞ்சு லட்சத்தோட கனடா போகலாமெண்டா ஆர் தான் அதை நழுவ விடுவினம். 'அக்கா, இந்தாங்கோ காசை வைச்சுக்கொண்டு என்னை உங்கட நிறுவனக் கூட்டத்துக்கு போறமாதிரி அனுப்பி விடுங்கோ' எண்டு கனபேர் கியூவில நிக்கத் தொடங்கியிருக்கினம்.**

**எல்லாரிட்டையும் வஞ்சகம் இல்லாமல் 'ஒரே காசு: ஒரே கனடா' எண்ட கொள்ளையோட 15 லட்சப்படி வாங்கி, கிட்டத்தட்ட 4 கோடிக்கும் மேல தன்ர எக்கவுண்டில போட்டிட்டா. காசை வாங்கிப்போட்டு, கிழமைக் கணக்கா கூட்டத்துக்கு அனுப்பேலையே எண்டு சந்தேகம் வந்த சிலர், அவாவிட்ட காசைக் கேட்டுப் பார்த்திருக்கினம். 'மீட்டிங் கான்சல் அடுத்தமுறை நடேக்கேக்க கட்டாயம் அனுப்புவம்' எண்டு அவா சொன்ன சாட்டை காசைக் குடுத்தவை நம்பத் தயாரில்லை. அதால பொலிஸிட்ட முறைப்பாடு செய்ய, பொலிஸ் விசாரிச்ச விசாரிப்பில 4 கோடியை ஆட்டையைப் போட்ட கதையை அம்மணி வெளியில கக்கிட்டாவாம். எப்பிடியெல்லாம் ஏமாத்துகினம் எண்டு பாத்தியளோ?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 – 2025)

எந்தச் சோதனை வந்தாலும் தன்மானத்தை விட்டுக்கொடுக்கக்கூடாது என்று வாழ்பவர்கள் தனுசு ராசிக்காரர்கள். மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களை உள்ளடக்கிய தனுசு ராசியைச் சேர்ந்த அன்பர்கள் போராட்ட குணம் உள்ளவர்கள். நினைத்ததை சாதிக்கும்வரை உறக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட தனுசுராசிக்காரர்களுக்கு இந்த குருப் பெயர்ச்சி எப்படி அமையும் என்று பார்ப்போம்.




இதுவரை 5 ஆம் வீட்டில் அமர்ந்து சகலவிதமான நன்மைகளையும் தந்துகொண்டிருந்த குருபகவான் மே 1 ம் தேதி முதல் 6 ம் இடம் சென்று மறைகிறார். இதனால் அடுத்த ஓர் ஆண்டுக்கு நீங்கள் அனைத்திலும் நிதானமாகச் செயற்பட வேண்டும். அதே வேளையில் குருபகவான் அவ்வப்போது உங்களுக்கு யோகபலன்களை அள்ளித் தருவார். வெளிவட்டாரத்தில் மரியாதை குறைவான சம்பவங்கள் நிகழும்.

வாழ்க்கையின் சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். மற்றவர்களை நம்பி இருக்காமல் தன் முயற்சியால் என்ன முடிகிறதோ அதைச் செய்து முன்னேறப் பாருங்கள். உங்களிடம் பழகுபவர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள்.

குருபகவான் குடும்ப ஸ்தானத்தை பார்ப்பதால் பேச்சில் ஒரு நிதானம் பிறக்கும். வராமலிருந்த பணம் கைக்கு வரும். வழக்கில் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவிக்குள் இருந்த சந்தேகம் தீர்ந்து ஆரோக்கியமான விவாதங்கள் வந்து நீங்கும். சூழ்ச்சியால் உத்தியோகத்தில் பதவியுயர்வை இழந்தீர்களே! இனி அதிக சம்பளத்துடன் பதவியுயரும். குரு 12ம் வீட்டை பார்ப்பதால் வீண் செலவுகளையெல்லாம் கட்டுப்படுத்துவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

1.5.2024 முதல் 12.6.2024 வரை உங்களின் பாக்கியாதிபதி சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். செல்வாக்குக் கூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. புதிய வேலை கிடைக்கும். தந்தை உதவுவார். பூர்வீகச் சொத்து கைக்கு வரும்.

12.6.2024 முதல் 19.8.2024 வரை மற்றும் 2.12.2024 முதல் 5.4. 2025 வரை உங்களின் அஷ்டமாதிபதியான சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் வீண் அலைச்சல்கள் அதிகரித்துக் கொண்டே போகும். வீண் செலவுகள் என அதிகரித்து மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்.

19.8.2024 முதல் 2.12.2024 வரை மற்றும் 5.4.25 முதல் 14.5.25 வரை உங்களின் பூர்வ புண்ணிய விரையாதிபதியான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். விலகிச் சென்ற நண்பர்கள் உறவினர்கள் விரும்பி வந்து பேசுவார்கள்.

**உத்தியோகம் :** பல வேலைகளை நீங்களே பார்க்க வேண்டி வரும். ஆனால் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். காத்திருந்த பதவியுயர்வு, சம்பளயுயர்வு எல்லாம் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் உங்கள் இருக்கை தேடி வரும். இழந்த புகழை மீண்டும் பெற யதார்த்தமான படைப்புகளைக் கொடுங்கள். அரசு பாராட்டும். வெளிநாட்டு நிறுவனங்கள் உங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

**இந்த குருமாற்றம் அவ்வப்போது உங்களை அலைக்கழித்தாலும் மறைமுக வெற்றியையும் தருவதாக அமையும்.**

## வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், மே 15

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டத்துக்கு இந்த வருடம் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல் அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தெரிவு தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சமர்ப்பிக்கவேண்டும். திட்டத்தில் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான 100 வீடுகளுக்கும் தலா 6 இலட்சம் ரூபா பெறுமதியான 12 வீடுகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரங்களே கிராம அலுவலர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ச-9)

## வரணி சிட்டிவேரம் பெருந்திருவிழா

சாவகச்சேரி மே 15

வரணி - சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும்மறுநாள் இரண்டாம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-9)

## ஒற்றையாட்சியை காக்கும் வேட்பாளர் நிறுத்தப்படுவார்

### நாமல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 15

ஒற்றையாட்சியை- தேசியத்துவத்தை பாதுகாக்கக்கூடிய வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான முதகெலும்புள்ள அரசியல் கட்சியே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே நாமல் இவ்வாறு கூறினார்.

மொட்டுக் கட்சியென்பது சுயாதீனக் கட்சியாகும். ஒற்றையாட்சி மற்றும் கட்சி முகாமையை பாதுகாக்கக்கூடிய, தேசியத்துவத்தைப் பேணக்கூடிய வேட்பாளரைத் தெரிவுசெய்யக்கூடிய முதுகெலும்புள்ள கட்சி எமது கட்சி. அந்தவகையில் பொருத்தமான வேட்பாளரை விரைவில் தெரிவுசெய்வோம்.

நாட்டுக்காக எவருடனும் இணைந்து செயற்படவும் தயார், விலகிச் செல்லவும் தயார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளா. வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விடவும் இலாபம் குறைவாகவே கிடைக்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரம் எப்போதும்போல் நடைபெறும்.

**மிதுனம்:** காரியம் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். ஆதாயம் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் கூடுதலாக இருக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. உணவு விடயத்தில் கவனம் தேவை. திருமால் வழிபாடு நலம் சேர்க்கும். அதிகரிக்கும். செலவு ஏற்பட வாய்ப்புள்ளது.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும். முன்னேற்றம் உண்டாகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கலகலப்பான சூழ்நிலை காணப்படும். காரியம் அனுகூலமாக முடியும். வீண்விவாதம் தவிர்க்கவும்.

**விருச்சிகம் :** காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போல நடைபெறும். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். ஆதாயம் உண்டாகும். விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். லாபமும் கூடுதலாகக் கிடைக்கும். தட்சிணாமூர்த்தி வழிபாடு நன்று.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பண உதவி கிடைக்கும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். மனதுக்கு உற்சாகம் கிடைக்கும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனத்தில் இனப்படுகொலை

## நெதன்யாகு பொறுப்பேற்கவேண்டும் நாடாளுமன்றில் சஜித் வலியுறுத்து



கொழும்பு, மே 15

**இஸ்ரேலின் கொலைகார அரச பயங்கரவாதம் பலஸ்தீன அப்பாவி மக்கள் மீது மேற்கொண்டுவரும் இனப்படு கொலையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த இனப்படுகொலைக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு பொறுப்புக்கூற வேண்டும் - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொலைகார அரசாக இஸ்ரேல் அரசு பலஸ்தீன மக்களின் வாழ்வை முற்றாக அழித்து, அவர்களின் தாயகத்தை அழித்து, அரச பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்தி பலஸ்தீன மக்கள் மீது நடத்திவரும் மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதற்கு எதிராக இலங்கையர்களாகிய நாம் உலக மக்களோடு முன்நிற்போம்.

உடனடியாகப் போர் நிறுத்தத்துக்குச் சென்று பட்டினியால் வாடும் பலஸ்தீன மக்களின் வாழும் உரிமை எல்லாவற்றுக்கும் முதல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இஸ்ரேல் அரசாங்கம் மருத்துவமனைகளுக்கு குண்டுத்தாக்குதல் நடத்துகிறது. பாடசாலைக்கு குண்டுத் தாக்குதல் நடத்துகிறது. குடிமக்களை அப்பட்டமாகக் கொலைசெய்து வருகிறது. இந்தக் கொலைகார அரச பயங்கரவாதத்தைக் கண்டிக்கின்றோம்.

இஸ்ரேலும் பலஸ்தீனும் சமாதானமாக பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என இதற்கு முன்னர் நாம் பேசும் போதெல்லாம் கூறினோம். இஸ்ரேல் அரசாங்கம் தொடர்ச்சியாகப் பலமுறை பேச்சு வார்த்தைகளை நிராகரித்து, பலஸ்தீன தாயகத்தை அழிக்கும் அரச பயங்கர வாதத்தைக் கண்டிக்கின்றேன், இந்தக் கொலைகார பயங்கரவாதத்தை கைவிடுமாறு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் ஹிட்லர் என்ற கொலைகாரன் அன்று யூதர்களை படுகொலை செய்ததுபோன்று இன்று இஸ்ரேலை ஆட்சி செய்யும் படுகொலை அரசாங்கம் பலஸ்தீன அப்பாவி மக்களை படுகொலை செய்துவருவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த அரச பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச சமூகத்திடம் கேட்டுக் கொள்கிறோம். அதற்குத் தேவையான அனைத்து ஆதரவையும் நாங்கள் நிபந்தனையின்றி வழங்கவேண்டும். பலஸ்தீன மக்களுக்கு வாழ்வுரிமையை மாத்திரமல்ல, அவர்களது நாட்டுக்குள் வாழும் உரிமை அவர்களுக்குள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு, பலஸ்தீனம், இஸ்ரேல் இரண்டு நாடுகளாகும் என்பதே - என்றார். (அ-ம)



வடமாகாண கராத்தே போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி முதலிடத்தை தனதாக்கியுள்ளது. கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இந்தப் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

காணி விற்பனைக்கு

யாழ்.கைதடி றோட், இல.42 மற்றும் 42/1 Army Camp எதிரில் கோப்பாய் சந்திக்கு அருகில் 41 பரப்பு வயல் காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பு 15 லட்சம். காணி முகப்பு 18 அடி அகலம்.

076 731 1829

தொடர் மாடி வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் காலி வீதிக்கு மிகவும் அருகாக, தெளிவான ஆவணங்களுடன் இரண்டு வீடுகளாக பாவிக்கக்கூடிய (தனித்தனிப் பாதை) 2100 SQF வீடு விற்பனைக்குண்டு.

அத்துடன் கல்கிசையில் 12P காணியும் விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(CS 28481) S-1

தொடர்பு:- 077 220 5522

சனல் ஆடுகள் விற்பனைக்கு

இடம்: வட்டு.தென் மேற்கு, வட்டுக்கோட்டை

மறி ஆடு இரண்டு குட்டிகளுடன் (2 1/2 மாதம்) - 100,000/

இரண்டு சனல் கடாய் ஆடு - 195,000/

076 234 6416



பச்சிலைப்பள்ளி, முகாவில், இயக்கச்சி.

அருள்மிகு திரியாய் அம்பாள் (பர்வதவர்த்தினி) தேவஸ்தான

**திருக்குளிர்த்திப் பொங்கல் விழா**

**17.05.2024 வெள்ளிக்கிழமை**

அம்பிகை மெய்யடியார்களே!

நிகழும் குரோதி வருடம் வைகாசித் திங்கள் 04ஆம் நாள் 17.05.2024 வெள்ளிக்கிழமை இயக்கச்சி, முகாவில், திரியாய் அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி பொங்கல் விழா இடம்பெறும். அன்று பகல், இரவு தொடர்ந்து விசேட அபிசேக ஆராதனைகளும், காவடி, பால்செம்பு, தீச்சட்டி, கரகம், பறவைக்காவடிகள் போன்ற நேர்த்திக்கடன் நிறைவேற்றல்களும் தொடர்ந்து நீராகாரமும், மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

குறிப்பு:-

அன்றைய நாள் பாதுகாப்பு முதலுதவி, சுகாதாரம் பேணல், குடிநீர் வசதி போன்றவைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் திருப்திகரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

▲ விசேட போக்குவரத்து ஒழுங்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தனியார் போக்குவரத்து சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

▲ வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தமது பதிவுகளை (15.05.2024) இன்று தொடக்கம் (17.05.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0775552123 / 077 3474 011 / 077 921 8830

▲ வர்த்தகத்தில் ஈடுபடுவோர் உணவுப் பண்டங்களை விற்பனை செய்வோர்க்கு முக்கிய அறிவித்தல் சுகாதார பணிமனையில் அனுமதியைப் பெற்றுவருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

▲ அனுமதியின்றி வியாபாரத்தில் ஈடுபட முடியாது என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

ஆலயத்தின் வளர்ச்சி கருதி அர்ச்சனைப் பொருட்கள் பரிபாலன சபையினரால் விற்பனை செய்யப்படும்.

வழமைபோன்று பொங்கல் விழா இரவு பகலாக நடைபெறும்.

முகாவில், இயக்கச்சி. **ஆலய பரிபாலன சபையினர்.**

(CS 28266) A-1

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**Vacancy Advertisement for Cook**

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict. HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,000 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.

We are looking to recruit Cook based in Kilinochchi. The purpose of the job is Preparing meals for Expatriate Staff.

**Job title:** Cook
**Salary:** LKR. 48,050.00 per month (after tax, EPF, and ETF)
**Location:** Kilinochchi
**Reports to:** Office Manager
**Working hours:** 08.00 to 16.00 hrs

**Main responsibilities:**

- Keeps the kitchen hygienically.
- Prepare meals hygienically.
- Keep clean area attached with kitchen.
- Liaise with Admin Support Officer for fresh food items and water supply.
- Maintaining the swimming lane properly
- Cleaning the poolside shower and recreational area

**Required**

- Applicants must be fluent in Tamil / English

All applications must be submitted to the below address no later than 25 May 2024 either by post or via email below. If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**

(cs 42445) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்தப் பொதுக் கூட்டம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப் படுகின்ற உதவித் திட்டங்கள் தொடர்பான தெளிவு படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. (ம-66)




2023ஆம் ஆண்டு வடமாகாணம் மற்றும் தேசியத்தில் நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முல்லைத்தீவு கல்வி வலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு றோ.க.த.க. பாட சாலையில் அண்மையில் நடைபெற்றது. (ம–19)



வவுனியா - நொச்சிமோட்டை ஒப்புரவில்லம் முன் பள்ளி மழலைகளின் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. (ம-75)



சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவ லனின் ஏற்பாட்டில், புங்குடுதீவு வீதிகளில் வேலணை மின்சாரசபையினரால் 60 மின்விளக் குகள் அண்மையில் பொருத்தப்பட்டன. (ப)



அச்சுவேலி மத்திய கல்லூரியின், மாணவர் நாடாளு மன்ற அமர்வு கல்லூரியின் தியான அரங்கில் அண்மையில் இடம்பெற்றது. (ப)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற வுள்ள மாணவர்களுக்கு ஆசி வேண்டி நாவலடி கோட்டை விநாயகர் ஆலயத்தில் அண்மையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. (ப-66)





தொல்புரம் விக்கினேஸ்வரா முன்பள்ளியின் பழ தினம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கிளர்ந்தெழ வைக்கும் அடக்குமுறைகள்

உயிரிழந்த தனது உரித்துடையோரை நினைவேந்துவது ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமை. இந்த அடிப்படை உரிமை ஜனநாயக நாடு என்று கூறிக்கொள்ளும் இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குத் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை முன்னிறுத்தி நடத்தப்பட்ட போராட்டம் கொடூரமான முறையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் மௌனிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு - காணாமல் ஆக்கப்பட்டு பல நாடுகளின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசாங்கம் போரை முடிவுக்குக் கொண்டுவந்து 15 ஆண்டுகள் கடந்துபோயுள்ளன. போரில் கொல்லப்பட்ட தங்கள் உறவுகளை அஞ்சலித்து நினைவேந்துவதற்கு வழியின்றியே இலங்கையில் தமிழினம் இன்னமும் அடக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நல்லிணக்கம் - ஒற்றுமை என்று பேசும் இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கத் தயாராக இல்லை. போரில் இறந்த தங்கள் உரித்துடையவர்களை அஞ்சலிப்பதற்கு - நினைவில் கொள்வதற்கு தமிழ் மக்களின் முன்னெடுப்புகள் அரசின் ஆதரவுடனேயே அடக்கி ஒடுக்கப்படுகின்றன. தற்போதைய அரசாங்கத்திலும் தமிழ் மக்களின் அஞ்சலிக்கும் உரிமைமறுக்கப்பட்டிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் கஞ்சி கொடுத்தவர்கள் பல்வேறு காரணங்களைக் காட்டிக் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். பலர் அச்சுறுத்தப்படுகின்றனர். பதவி கைக்கு வந்ததும் மக்கள் தங்கள் உறவுகளை நினைவேந்தும் உரிமை உள்ளது என்று கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது மௌனமாக இருக்கின்றார். உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் உரிமையை மறுத்து -அதைத் தடுத்து விட்டால், தமிழர்களின் உணர்வுகளை மழுங்கடித்து விடலாம் என்ற பிற்போக்குத்தனமான - அடக்குமுறைச் சிந்தனையுடனேயே தற்போதைய ரணில் அரசாங்கமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இலங்கைத் தீவில் இன நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால் அனைத்து மக்களும் தங்கள் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். அவ்வாறான நிலைமையை ஏற்படுத்தாது - சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களின் எண்ணப்போக்கிலேயே வாழவேண்டும் என்ற மேலாதிக்கச் சிந்தனை தொடர்ந்தால் ஒருபோதும் இந்தத் தீவில் இன நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை. பெரும்பான்மையினரின் இந்த மேலாதிக்கச் சிந்தனையே பல தசாப்த காலப் போரை ஏற்படுத்தியது. அந்தப் பட்டறிவின் பின்னரும் பெரும்பான்மையினரின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படாதது இந்தத் தீவின் சாபம் என்றே கூறவேண்டும். அடக்குமுறைகளின் மூலம் மக்களின் உணர்வுகளை மழுங்கடித்துவிடலாம் என்று மேலாதிக்க ஆட்சியாளர்கள் கருதுவார்களேயானால் அவர்களுக்கு ஏமாற்றமே எஞ்சும். தொடர்ச்சியான அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் மக்கள் கிளர்ந்தெழுந்த வரலாறே உலகம் முழுவதும் உள்ளது. சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் அம்மக்களை கிளர்ந்தெழவே வைக்கும். அந்த நிலைமை இலங்கையை மீண்டும் பின்னோக்கியே இழுக்கும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.




## வளப்பற்றாக்குறையால் சுகாதாரசேவை வீழ்ச்சி

### யாழ்.போதனா பணிப்பாளர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மே 15**

**இலங்கையின் சுகாதாரசேவை, வளர்ச்சி அடைந்த நாடுகளின் சுகாதார சேவையை நோக்கிப் பயணிக்கின்றபோதும் சுகாதாரசேவைக்கான நிதி மற்றும் மனிதவளப் பற்றாக்குறையால் சவால்களை எதிர்நோக்கியுள்ளது.**

-இவ்வாறு யாழ்.போதனா மருத்துவமனையில் இடம்பெற்ற தாதியர் தின நிகழ்வில் மருத்துவமனையின் பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஏனைய நாடுகளோடு ஒப்பீடு செய்தால் சுகாதாரத்துறையின் ஆளணி வளம் எமது நாட்டில் குறைவாகவே காணப்படுகிறது.

இலங்கையில் தாதியர்கள் உட்பட சுகாதார சேவைக்கான வளங்களில் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் பூரண சேவையை வழங்குவதில் இலங்கை பெரும் சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது.

இலங்கையில் சுகாதாரசேவை மேலும் வலுவடைய அதிகளவு நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்ட ஆளணியும் போதிய பயிற்சியும் முக்கியமானது- என்றார். (ச-27)

## பொருளாதார இடரால் காவி களையும் பிக்குகள்



யாழ்ப்பாணம்,மே 15

ஆண்டுதோறும் 2 ஆயிரம் பிக்குகள் தமது காவி அங்கவஸ்திரங்களைக் களைந்து விட்டுச் செல்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் எதிரொலி காரணமாகவே அவர்கள் காவி அங்கவஸ்திரங்களை களைந்து செல்கின்றனர். பிக்குகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-6)

## அந்நியச் செலாவணி உயர்வு

இந்த வருடத்தின் முதல் காலாண்டியில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களால் 2.079 பில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் அந்நியச் செலாவணி 11.4 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அதேவேளை நாட்டுக்கு சட்டபூர்வமாகப் பணம் அனுப்பும் புலம்பெயர்ந்த தொழிலாளிகளுக்கு மின்சார வாகன இறக்குமதி உரிமங்களை வழங்கல், வீட்டுவசதி, பல்நோக்கு கடன் முன்மொழிவுகளை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## விஞ்ஞான பாடத்துக்கு இலவச புள்ளிகள்

சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞானப் பாட வினாத்தாளின் சில வினாக்களில் காணப்பட்ட குளறுபடிகள் காரணமாக அந்த வினாக்களுக்கு மாத்திரம் இலவசப் புள்ளிகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானப் பாடத்துக்கான வினாத்தாளில் காணப்படும் சில வினாக்கள் பாடப்பரப்புக்கு அப்பால் தயாரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படும் நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். (ச)

## முன்பள்ளி ஆசிரியருக்கு ஓய்வூதியம்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஓய்வூதிய முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சும், சமூக வலுவூட்டல் அமைச்சும் இணைந்து இந்த அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

### நாளை

16.05.2024

**வியாழக்கிழமை**

**வைகாசி - 03**

சுபநேரம் : 07.23 - 08.53

ராகுகாலம் : 01.23 - 02.53

### நாளொரு நல்வார்த்தை

**தேவைக்கு மேலே பொருளும்,**
**திறமைக்கு மேலே புகழும்,**
**கிடைத்துவிட்டால் பார்வையில்படுவதெல்லாம்**
**சாதாரணமாகத் தான் தெரியும்**

**- கண்ணதாசன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பெயர் தவறாக உபயோகம்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 15

ஜனாதிபதி ஊடகப் பிரிவிலிருந்து கதைப்பதாகத் தெரிவித்து இலஞ்சம் கோரியவருக்கு எதிராக, புத்தளம் பிரதேச செயலரின் முகநூல் பதிவை அடிப்படையாக வைத்து விசாரணைகள் ஆம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம்பிரதேசசெயலருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியவர், ஜனாதிபதி ஊடகப் பிரிவிலிருந்து கதைப்பதாக அறிமுகப்படுத்தியுள்ளார். புத்தளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒருவரின் தொலைபேசி இலக்கத்தை அவர் கோரியுள்ளார். அரசாங்கம் அவரது காணியை சுவீகரித்துள்ளது. அவருக்கு 50 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. அதுதொடர்பில் விசாரணை மேற்கொள்ளவே இலக்கத்தைக் கோருவதாக சம்பந்தப்பட்ட நபர் பிரதேச செயலரிடம் தெரிவித்துள்ளார். முறைப்பாடு தொடர்பான விளக்கங்களை பிரதேச செயலர் கோரிய போதும், சம்பந்தப்பட்ட நபர் அதை வெளிப்படுத்த மறுத்துள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதி ஊடகப்பிரிவிலிருந்து தொடர்பு கொண்டவரின் தொலைபேசி இலக்கத்தை, அவர் கோரிய நபருக்கு புத்தளம் பிரதேச செயலர் வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவிலிருந்து தொடர்புகொள்வதாக அறிமுகப்படுத்தியவர், சம்பந்தப்பட்ட நபரிடம் ஒரு தொகைப் பணத்தை இலஞ்சமாகக் கோரியுள்ளார். சம்பந்தப்பட்ட நபர் இது தொடர்பில் புத்தளம் பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இதையடுத்து புத்தளம் பிரதேச செயலர், நடந்த சம்பவத்தை முகநூலில் பதிவிட்டுள்ளார். புத்தளம்பிரதேச செயலரின் முகநூல்பதிவை அடிப்படையாக வைத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-6)



### கொரோனா காலத்தில்

# இணையப் பாவனை பன்மடங்கு உயர்வு

யாழ்ப்பாணம், மே 15

கொரோனாத் தொற்று பரவியிருந்த கடந்த 2023 ஆம் ஆண்டு இணையத்தைப் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை நாட்டின் சனத்தொகையில் 66 வீதமாக அதிகரித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த விடயத்தை கட்டுப்படுத்த ஆய்வு நடத்தி வேறு நாடுகள் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வரும் நிலையில் இலங்கை இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# குழந்தை பிரசவித்து தப்பித்த சிறுமி மீட்பு

## சந்தேகநபரும் கைது

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பிரசவித்த குழந்தையைக் கைவிட்டுத் தலைமறைவான பாடசாலைச் சிறுமி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் குறித்த சிறுமியை தாய்மை அடையச் செய்த சந்தேகநபரும் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி - துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமி கர்ப்பம் தரித்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு குழந்தை பிறந்த நிலையில் அந்த பச்சிளம் சிசுவை அநாதரவாக விட்டுவிட்டு மறுநாள் சிறுமியும் அவரது தாயாரும் தலைமறைவாகியிருந்தனர்.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸார், சிறுமியை மீட்டதுடன் சிறுமியை தாய்மை அடையச் செய்யக் காரணமாகவிருந்த குற்றச்சாட்டில் மல்லாவியைச் சேர்ந்த 25 வயது உடைய இளைஞர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். (ச-100)


# பதிவுசெய்யப்பட்ட மருந்துகள்; ஸ்ரிக்கர் அறிமுகம்

யாழ்ப்பாணம், மே 15

மருந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக விசேட ஸ்ரிக்கர் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் விஜேவிக்ரம தெரிவிக்கையில்,

குறித்த திட்டமானது, மருந்துகளுக்காகப் போலி பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்படும் சகல மருந்துகளிலும் குறித்த ஸ்ரிக்கர் பதிக்கப்பட்டிருக்கும் - என்றார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச அரிசியை உண்ட கோழிகள் உயிரிழப்பு!

கொழும்பு, மே 15

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இலவச அரிசியை உட்கொண்ட 7 கோழிகள் உயிரிழந்துள்ளமை தொடர்பில் சுகாதார அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

ரிதிகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பானகமுவ பகுதியிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தவர் ஒருவர் தனது கோழிகளுக்கு குறித்த இலவச அரியை உட்கொள்ள வழங்கியுள்ள நிலையில் 7 கோழிகள் உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதையடுத்து அவற்றின் உரிமையாளர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார். அந்த அரிசியை உட்கொண்டதால்தான் கோழிகள் உயிரிழந்துள்ளனவா என்பது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இது தொடர்பில் மேலதிக சோதனை அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் றம்படகல்ல நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர். அதையடுத்து அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இலவச அரிசி தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று றம்படகல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

# தாதியர் ஆட்சேர்ப்பை துரிதப்படுத்த கோரிக்கை

கொழும்பு, மே 15

2019/2020 காலப்பகுதியில் வெளியேறிய சுமார் 3000 பேர் தாதியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 3000 பேர் நியமிக்கப்படவுள்ளனர். இந்த ஆட்சேர்ப்புகளை துரிதப்படுத்தவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

கொரோனா வைரஸ் பரவல், வங்குரோத்து நிலை போன்றவற்றால் இந்த ஆட்சேர்ப்பு தாமதமானது. இதை மேலும் தாமதப்படுத்தாமல் இந்த ஆட்சேர்ப்புகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)




# நக்கிள்ஸ் மலைச்சாரலில் 23 பேர் கைது

கொழும்பு, மே 15

கண்டி - மாத்தளை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள நக்கிள்ஸ் மலைச்சாரலில் தற்காலிக கொட்டகை அமைத்து தங்கி இருந்த 23 இளைஞர், யுவதிகள் உன்னஸ்கிரிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு வனப்பிரதேசத்தில் தீ மூட்டுவது தடை செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்கள் அனுமதி இன்றி வனப்பிரதேசத்தினுள் பிரவேசித்து கூடாரம் அமைத்து அடுப்பு ஒன்றை உருவாக்கி தீ மூட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் 20 முதல் 30 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள், பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய ஒருவர் மற்றும் தனியார் துறையில் பணியாற்றுபவர்கள் எனப் பல தரப்பினர் உள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# மின்சாரம் தாக்கி சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, மே 15

களுத்துறை மாவட்டத்தில் பயாகல, மக்கொன பகுதியில் மின்சாரம் தாக்கி 3 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார்.

சிறுமி வீட்டில் பாதுகாப்பற்ற மின்சார பிளக்கை தொட்டபோது மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசில் வழங்கல் நிகழ்வும் இணுவில் பொதுநூலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. (எ)

# மின்னல் தாக்கி மாடுகள் உயிரிழப்பு

கொழும்பு, மே 15

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேய்ச்சலுக்காக புற்றரையில் கட்டப்பட்டிருந்த நான்கு மாடுகள் நேற்றுமுன்தினம் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளன.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ததையடுத்து மின்னல் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. மின்னல் தாக்கப்பட்ட இடத்தில் பெரும் குழியொன்று தோன்றியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்குபவர்
கைதட்டுகிறார்
துணிந்தவர்
கைதட்டல்
பெறுகிறார்

– பிடல் காஸ்ட்ரோ

புதன் பொய்கை

15.05.2024
புதன்கிழமை



# கனன்று நிற்கும் உயிர்க்கூடுகள்!

நி. பிரதிகா

நீங்காத பெருவலியைத் தந்த தமிழின அழிப்பின் உச்சம் முள்ளிவாய்க்காலில் அரங்கேறி 15 ஆண்டுகள் பறந்தோடிவிட்டன. யுத்தம் விழுங்கிய பூமியின் இரத்தம் குடித்த முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூரும் மே 18, என்றும் நெஞ்சை விட்டு நீங்காத நினைவுகளை எம்மிடையே பதித்துவிட்டது. போர் விமானங்களும், கரும்புகையும், பற்றி எரிந்த பனை மரங்களும், இடிந்து போன வீடுகளும், சிதறிக்கிடந்த உடல்களும், கருகிப் போன உயிர்களும் அப்பப்பப்பா.... இன்றைக்கும் அந்தக் காட்சிகள் கண்ணுள்ளே கனன்று கொண்டிருக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் கதி என்னவென்று இன்றுவரை தெரியவில்லை. சொந்த வீடுகளையும், உடைமைகளையும் இழந்த மக்களுக்கு இலவச இணைப்பாக ஒரு குடும்பத்தில் குறைந்தது ஓர் உயிரேனும் பறித்தெடுக்கப்பட்டதே. உறவுகளை இழந்து நொடிக்கு நொடி அநாதைகளாக்கப்பட்டோரின் தலைவிதி என்ன? போரிலே சிக்குண்டு சின்னாபின்னமான மக்களின் வாழ்கை நிலை என்ன? உண்மையில் சொல்லப்போனால் எவரும், எதுவும் போரின் அதிர்விலிருந்து இன்னும் மீண்டு வரவில்லை. நிவாரணங்களும், நிதிகளும் போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றப்போவதில்லை. நியாயமான நீதியே அதற்கு மருந்தாகும். ஈழத்தமிழ் மக்களின் நீதிக்கான, அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்கள், சர்வதேச நாடுகளின் தீர்க்கமான கவனத்தை ஈர்ப்பதில் தொடர்ந்து தோல்வியையே அடைந்துகொண்டிருக்கின்றது. இதற்கு நாம் அதிகம் போராடவும் பயணிக்கவும் வேண்டியுள்ளது.







சிங்களப் பேரினவாதிகளின் சிறுபான்மை தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறைகளை சகித்துக் கொள்ள முடியாத மக்கள் அவர்களுக்கெதிராக குரல் எழுப்பத்தொடங்கினர். தமக்கென தனித் தாயகம் கேட்டு சுதந்திர உரிமைகளுக்காக போராடத்தொடங்கினர். அதன் அத்தியாயமாக ஆரம்பிக்கப்பட்டது விடுதலைப்புலிகள் இயக்கம். அன்று எழுதப்பட்ட தமிழினத்தின் தலைவிதி யுத்த சரித்திரமாய் ஆரம்பித்தது, இரத்த சரித்திரமாய் முடிவடைந்தது. 1970களில் தமிழர் மீதான பௌத்த பேரினவாதத்தின் மனித உரிமை மீறல்..ள் அதிகளவில் நடைபெறத்தொடங்.. விட்டன. உரிமை கேட்டுக் கு.. எழுப்பியவர்கள் தீவிரவாதிகள் என.. பச்சை குத்தப்பட்டனர். அதன் வி.. வாகவே 30 ஆண்டுகளாக ஈழ ம.. கனக்க நேரிட்டது. அகிம்சை வழி.. போராட்டம் ஆயுதப் போராட்டமானது. 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி இரவு முதல் 18ஆம் திகதி அதிகாலை 3.30 மணிக்குள் முள்ளிவாய்க்கால் முழுதாக இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயமென பாதுகாப்புப் படையினர் அறிவித்ததையடுத்து, மீதமிருந்த மக்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அங்கே திரண்டனர். தறப்பால் கூடாரங்களுக்குள்ளும், பங்கர்களுக்குள்ளும் பொழுதைக் கழித்தனர். ஒருபுறம் பசியும், தாகமும் வாட்டி எடுத்தது. உடலாலும், மனதாலும் அவர்கள் சோர்வடைந்திருந்த வேளை மே 18 காலை 7 மணியளவில் கடும் மழை பொழியத் தொடங்கியது. பொழிந்தது நீர் மழை அல்ல, நெருப்பு மழை. பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட, ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தமிழர் திரண்டிருந்த முள்ளிவாய்க்கால் மீது இராணுவத்தினர் குண்டு மாரி பொழிந்தனர். தமிழர்கள் மீதான சிங்களப் பேரினவாதத்தின் இன வெறி தீர்த்துக் கொள்ளப்பட்டது. சிறு குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை பாரபட்சமின்றி அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். சரணடைந்தவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு கைகள் கட்டுப்பட்டுக் கொல்லப்பட்டனர். உயிரற்ற உடல்கள், உயிருக்குப் போராடியவர்கள் என அனைவர் மீதும் ஏறிக்கொண்டு இராணுவ வாகனங்கள் ஊர்வலம் போயின. தாய் இறந்தது கூடத் தெரியாமல் பிஞ்சுக் குழந்தை தாயின் மார்பில் பசி தீர்த்த அவலமும் அங்கு தான் நடந்தது. 2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரலை விழுங்கிய தமிழர்களை விடவும், இறுதிப்போரில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகம். ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நம் உறவுகள் உயிரிழந்தனர். அநேகமானோர் உடல் உறுப்புகளை இழந்தனர். இறுதியில் சொந்த பந்தங்களையும், சொத்துகளையும் இழந்து நடைபிணமாய் எஞ்சியிருந்த மக்கள் நந்திக் கடலூடாக வெளியேறத்தொடங்கினர். விடுதலைப்புலிகளின் தலைவர் உட்பட அனைவரையும் கொன்றொழித்து விட்டதாகவும், போர் முடிந்து விட்டதாகவும் அரசு அறிவித்தது. கனத்த இதயத்தோடும், கண்ணீர் தோய்ந்த முகத்தோடும், பசித்த வயிறோடும், கிழிந்த உடையோடும் அகதிகளாய் முகாம்களிலே நம் உறவுகள் அடைந்து கிடக்க, மறுபுறம் பௌத்த பேரினவாதம் தமது வெற்றி முரசை ஓங்கி ஒலிக்கச்செய்து கொண்டிருந்தது. தென் பகுதி முழுவதிலும் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. இராணுவத்தினருக்குப் பதவி உயர்வும் வழங்கப்பட்டது.



வன்னியை விட்டு வெளியேறிய மக்கள், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் முகாமிட்டுத் தங்கவைக்கப்பட்டனர். பெரும் போராட்டங்களுக்கு மத்தியிலேயே அவர்களுக்கான உதவிகளும் வழங்கப்பட்டன. முகாம் என்ற சொல்லைக்கேட்டாலே முள்வேலிதான் ஞாபகத்துக்கு வரும்.

வன்னிப் போரில் சிக்கிச் சீரழிந்த மக்கள் முகாம்களில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முள்ளியவளை கோவலன் கூத்து

## தனித்துவமானதொரு பொக்கிசம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வினை முன்னிட்டும், காட்டுவிநாயகர் ஆலய வைகாசிப் பொங்கல் நிகழ்வினை முன்னிட்டும் முள்ளியவளை கலைஞர்களால் நடத்தப்பட்டு வரும் கோவலன் - கண்ணகி நாட்டுக்கூத்து, முல்லைமோடி ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய முன்றலில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

'முல்லைத்தீவு மண்ணில் பலவிதமான கூத்துகள் உள்ளன அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மரபில் உயர்ந்து நிற்கின்றன. ஒரு கூத்து ஆட்ட மரபில், ஒருகூத்து இசை மரபில், ஆனால் முள்ளியவளை மண்ணின் கோவலன் கூத்து இசை மரபிலும் ஆட்டமரபிலும் செறிவு கொண்ட ஒரு மிகச்சிறந்த கூத்தாக இருக்கின்றது. இந்தக் கூத்து மரபினை நாங்கள் பாதுகாக்கவேண்டும் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்த்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கவேண்டும்' என்று நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகத்தின் இசைத்துறை தலைவரான தவநாதன் றொபேட் தெரிவித்தார். (ம-19)



# சுருதிலய சாம்ராஜ்ஜியத்தின் பரிதியாகப் பிரகாசித்த கரவொலிபவன்

கே.எஸ்.சிவஞானராஜா



அரை நூற்றாண்டு காலம் இசையால் வடபுலத்தை ஆண்ட சுருதிலய வேந்தனாக வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் திகழ்ந்துள்ளார். இலங்கை, இந்தியக் கலைஞர்களால் மிகவும் விரும்பப் பட்ட சிறந்த பக்க வாத்தியக் கலைஞராவார். சுமார் ஆயிரம் இசைக்கச்சேரிகளுக்கு சொந்தம் கொண்டாடிய இசைப் பிரம்மன் இவர். யாழ்ப்பாணத்தில் அரங்கேறிய வாய்ப்பாட்டு, மிருதங்க, நடன அரங்கேற்றங்களை தனது வாசிப்புத் திறமையால் வசீகரித்த வயலின் பேராசான் இவராவார். இசையுலகில் இவரின் தந்தையார் மிருதங்கப் பேராசான் அமரர் அம்பலவாணர் எப்படி கொடிகட்டி யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தாரோ அதேபோல அவரின் மகனான அமரர் ஜெயராமனும் வயலின் வாசிப்பில் வானுயர உச்சம் தொட்டவர்.

கல்பிதம், மனோதர்மம் இரண்டிலும் நனி சொட்டிய வள்ளலாக மிளிர்ந்தார். இராகம், தாளம், பல்லவி இவரின் சொத்தாகும். அமரர்களான சங்கீத சாகித்திய சுருதி லய கர விரலோன்களான இராதாகிருஷ்ணன், குமாரசாமி, பிச்சையப்பா,சண்முகானந்தம், சர்வேஸ்வரசர்மா, வெங்கடேஸ்வரசர்மா, கேசவமூர்த்தி ஆகியோரின் ஆசீர்வாதத்தையும் வசீகர வாசிப்பையும் பேறாகக்கொண்டவர். தாழாத கீர்த்தியுடன் மாறாத வார்த்தையும் நிரம்பப்பெற்றமையால் இசையாளர்களை தம்வசமாக்கி கச்சேரி தர்மத்தினைப் பேணி சமூக மட்டத்தில் ஒரு ஜாம்பவானாகத் திகழ்ந்தார். இசை விழாக்கள், தியாகராஜ உற்சவ வைபவங்கள், ஆலயத் திருவிழாக்கள், கம்பன் விழாக்கள், பண்ணிசை நிகழ்வுகள், பல்கலைக்கழக இசைநிகழ்வுகள், நாட்டிய நாடக நிகழ்வுகள் யாவற்றிலும் வயலின் வாத்தியம் இவரை வாரியணைத்து வள்ளல் ஆக்கிற்று. இசையுலகில் இவரின் நாமம் மந்திரமாக ஒலிக்கும்.



# கனன்று...

(தொடர்ச்சி)

தங்கவைக்கப்பட்டிருந்தனர். வெட்ட வெளியான அந்த இடத்தில் உடம்பெல்லாம் எரிந்து போகும் அளவுக்கு வெயில் கொளுத்தும். சுற்றிலும் முள் வேலி. அதற்குள்ளே ஆயிரக்கணக்கில் சின்னச் சின்னத் தறப்பால் கொட்டகைகள். அதுதான் அவர்களின் வீடு. அங்கிருந்த சிறுவர்கள், இரண்டு முள்ளுக் கம்பிக்கு நடுவில் தலையை நீட்டி எட்டிப்பார்க்கும் போது முகத்தில் சிரிப்பும் அதோடு சேர்ந்து ஏக்கமும் கலந்திருக்கும்.

அந்தச் சிரிப்புக்குப் பின்னால் இருந்த வலியின் தாற்பரியத்தை எத்தனை பேரால் உணர முடியும். அவர்களின் கண்ணீருக்குப் பின்னால் கசப்பான போர் அனுபவம் நிறைந்திருக்கும். முள்ளிவாய்காலில் கஷ்டப்பட்ட மக்கள் முகாமில் மட்டும் களிப்புடனா இருந்தார்கள்? துன்பம் தொடர் கதைதான். இது தானா, விடுதலை? இதுவா நிவாரணம்?

இரண்டு கொடிகளுக்கிடையில் நடந்த யுத்தத்தில் எத்தனை தாலிக்கொடிகள் அறுக்கப்பட்டிருக்கும். தாயகத்தின் தாகம் தணியும் முன்பே, மக்களின் வாழ்க்கை தணிந்து போயிற்று. தமிழர்களை வீழ்த்த, சர்வதேச நாடுகளும் தொழில்நுட்ப ஆயுதங்கள் தந்து துணை போனதே. ஐக்கிய நாடுகள்சபை மீதான எந்தவொரு பயமோ பதற்றமோ இல்லாமல் சிங்களப் பேரினவாதிகள் கொன்றொழித்தது தமிழ் மக்களை மட்டுமல்ல புத்தரின் தர்மத்தையும் தான். 'நாங்கள் மக்கள் மீதல்ல புலிகள் மீது மட்டுமே தாக்குதல் நடத்தினோம்' என்று பொய்யைப் புனிதமாக்க, சிங்கள அரசு முயன்றாலும் நடந்தது இனப்படுகொலைதான் என்பதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. அவற்றில் சில காணொலிகளை இங்கிலாந்தின் 'சனல் - 4' எனும் ஊடகம் வெளியிட்டது. இனப்படுகொலைக்கு நீதி கேட்டு எத்தனையோ முறைப்பாடுகள் தமிழர்களால் முன்வைக்கப்பட்டபோதும் ஐ.நா.வும், சர்வதேச அமைப்புகளும் எந்தவொரு நீதி விசாரணைகளையும் சரிவர மேற்கொள்ளவில்லை. நடந்தவைகளெல்லாம் மறைக்கப்படவும், மறக்கடிக்கப்படவும் எத்தனையோ தந்திரங்கள் எம்மைச் சுற்றி நடந்துகொண்டிருக்கின்றன.

இன்றைக்கும் தமிழர்களின் பண்பாடும், கலாசாரமும் அழிக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. தமிழரின் ஆலயங்கள் பௌத்தமயமாக்கப்படுகின்றன. எந்த நீதிக்காக எம்மக்கள் இன்னுயிர் நீத்தார்களோ அதற்கான வெளிச்சம் கேள்விக்குறியாகிக் கொண்டே செல்கிறது. ஒழுங்கற்ற, பிரிந்து செயற்படும் தமிழ்க்கட்சிகளும் இதற்குக் காரணமே. தமிழ்த் தேசியம் பேசித் திரியும் தமிழ் அரசியல்வாதிகள் ஒரு மூச்சாய் ஒன்றாகிச் செயற்பட்டால் தமிழர் மீதான ஒடுக்கு முறைகளை உடைத்தெறிய முடியும். நாலு கால் கதிரைக்கு ஆசைப்பட்டு சில நரிகள் செய்யும் செயல்களின் விளைவுகளே நாம் முன்னேறிச்செல்ல முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

எத்தனையோ எதிர்ப்பை எதிர்கொண்டு எப்படியோ நினைவேந்தல்களை நடத்திக்கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நினைவேந்தல் தளத்திலும், காய்ந்த மண்ணும் கண்ணீரால் கரைந்து போகும் நாளிது. இந்த 15ஆவது தமிழர் படுகொலை தினத்திலே பல்லாயிரம் ரூபா பணத்தைக் கொட்டி நினைவேந்தல் செய்து படம் பிடித்து பகிர்வதை விடவும் போர் வடுக்களிலிருந்து இன்னும் வலிமை பெற்று வராத உறவுகளுக்கு அவர்களின் தாயாக, தந்தையாக, சகோதரர்களாக, பிள்ளைகளாக உதவிக் கரம் நீட்டுவோம். நீதி கிடைக்கும் இழப்பின் வலி என்னவென்று அந்த இனவெறியர்களுக்கு நினைவூட்டிக்கொண்டே இருப்போம். முள்ளிவாய்க்கால் எமக்கு முடிவல்ல: முடிந்துபோக அது வெறும் கதையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள் நிரப்பு நிலையம் – முகமாலை
நட்சத்திரமஹால் திருமண மண்டபம் – கொடிகாமம்
இணைந்து வழங்கும்

# மாபெரும் நடனப்போட்டி

"நட்சத்திர நர்த்தன சங்கமம் – 2"

இடம் :– நட்சத்திரமஹால் திருமண மண்டபம்
(A9 வீதி, கொடிகாமம், யாழ்ப்பாணம்)
காலம் :– 29.06.2024 (சனி)
30.06.2024 (ஞாயிறு)

கீழ்ப்பிரிவு – கிராமிய நடனம் (10-14 வயது)
(செம்பு, சுளகு, வேப்பிலை ஏந்தி ஆடுதல்)
மத்திய பிரிவு – Fushion Dance (15-17 வயது)
– எமது கலாச்சாரங்களை உள்ளடக்கியதாக சமூகத்திற்கு நற்செய்திகளை கூறுவதாக அமைதல் வேண்டும்.
மேற்பிரிவு – பரதநாட்டியம் (18 – 25 வயது)
"தில்லானா"

ஒவ்வொரு குழுவிற்கும் பரிசுத்தொகை
1ம் பரிசு 100 000/=
2ம் பரிசு 75 000/=
3ம் பரிசு 50 000/=

- ஒவ்வொரு குழுவிலும் 05-08 மாணவர்கள் பங்குபற்ற முடியும். இருபாலரும் ஒரு குழுவாக பங்கு பற்றலாம்.
- ஒவ்வொரு நடனமும் 05 - 08 நிமிடங்கள் வரை அமைதல் வேண்டும்.
- இலங்கையின் எப்பிரதேசத்தில் இருந்தும் பங்குபற்ற முடியும். 10.06.2024 திகதி வயதெல்லைகள் கணிக்கப்படும். (நிகழ்வு நடைபெறும் அன்று பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பரிசீலிக்கப்படும்.)
- பெறுமதியான பரிசில்கள் ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்படும். பங்கு பற்றிய குழுக்கள் அனைத்திற்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
- பக்க வாத்தியங்கள் நேரடியாகவோ, ஒலிநாடா மூலமாகவோ செய்ய முடியும். அதற்குரிய செலவுகள் வழங்கப்படமாட்டாது.
- 2000/= கட்டுப்பணம் செலுத்தி விண்ணப்பங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

தொடர்புகளுக்கு:- 077 999 2304 (நிகழ்ச்சி விபரங்கள்) 077 778 0730
074 105 7593 (விண்ணப்பப்பதிவுகள்) 0033 69 923 5950
077 037 2757

விண்ணப்பமுடிவுத்திகதி
10.06.2024

# மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 10 . 1942

மறைவு 14 . 05 . 2024

## இராசரத்தினம் கனகம்மா

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கனகம்மா நேற்று (14.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வுபெற்ற நிதி உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி) அவர்களின் அன்பு மனைவியும், சுரேஷ் (UK), காமினி (UK), ரமேஷ் (UK), பாமினி (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைவாணி (UK), அற்புதஜெயம் (UK), கருணா (UK), காலஞ்சென்ற சகிலன், ஜெயதிஸ்ஸா (UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனோஷிகா, ஹென்றி, ஆகாஷ், கமிஷா, கமேஷ், ரியானா, கபிஷன் (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், பராசக்தி மற்றும் செல்லமுத்து, இராசாத்தி, காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 074 519 8084
070 519 8084
077 994 3979

தகவல்:
குடும்பத்தினர்.

# சுழிபுரம் திருவடிநிலையில் காணி சுவீகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 15

ஜே/174 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் கிழக்கு மற்றும் ஜே/172 கிராமஅலுவலர்பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு திருவடிநிலை பகுதியில் 0.1012 ஹெக்ரெயர் விஸ்தீரணமுடைய காணிகள் இலங்கைக் கடற்படைக்காகச் சுவீகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காணி சுவீகரிப்புப் பிரிவு 2 அடிப்படையில் எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து தினமும் (வேலை நாட்களில்) காலை 9 மணியிலிருந்து மாலை வரை நில அளவை செய்யப்படுமென அரச நில அளவையாளர் ச.பவனின்கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-66)

## மின்பிறப்பாக்கி விற்பனைக்கு உண்டு




சீரான முறையில் பராமரிக்கப்பட்ட இயங்கு நிலையில் உள்ள (200KVA) Ashok Leyland மின் பிறப்பாக்கி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
076 885 7674
0033699235950

(CR 42446) A-1

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 26.04.1947

ஆண்டவன் அடியில் 13.05.2024

## விஜயரட்ணம் கெங்காதரன் (Great கெங்கா)

பருத்தித்துறை வீதி, யாழ் நகரைப் பிறப்பிடமாகவும், இல.50/4, சங்கிலியன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட, யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவனும், யாழ்.மத்திய கல்லூரியின் முன்னை நாள் கிரிக்கட் பயிற்றுவிப்பாளரும், PWD வெளிக்கள மேற்பார்வையாளருமாகிய விஜயரட்ணம் கெங்காதரன் அவர்கள் நேற்று முன்தினம் (13.05.2024) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் - நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகம்மா அவர்களின் பாசமிகு கணவரும், மயூரன் (ANJ BROS), காலஞ்சென்ற சிவகாமி (மேனகா) மற்றும் பகீரதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற லீலாவதி மற்றும் சிறிதரன், ரேவதி (ராணி), புலேந்திரன், மனோகரன், கமலாவதி (தேவி), காலஞ்சென்ற இராஜேந்திரன் (ஜேர்மனி) மற்றும் யமுனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜனனி (சம்பூர்), நீலவேணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிஷாளி, மயூரிக்கா, பைஷ்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், பரமலிங்கம், ரஞ்சினி, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் இந்திரகுமாரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இராசையா மற்றும் ரூபா (ஜேர்மனி), ரவி (கனடா), காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பசுபதி (முத்தையன் கட்டு), கனகலிங்கம் (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2024) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 049 8084

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 00500) S-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவசாவடி அகற்றம்!

கொரோனாக் காலப்பகுதியில் ஓமந்தை பகுதியில் அமைக்கப்பட்ட இராணுவச் சோதனைச்சாவடி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அகற்றப்பட்டது. கடந்த காலங்களில் நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததால் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதன்போது, ஓமந்தை உட்பட பல்வேறு பகுதிகளில் தற்காலிக இராணுவ சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் ஓமந்தை சோதனைச்சாவடி மாத்திரம் 4 வருடங்களாக அகற்றப்படாமல் இருந்த நிலையில் தற்போது அகற்றப்பட்டுள்ளது. (ப-110)

## பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும்


வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்தின் முக்கியமான நிகழ்வுகள் பற்றித் தீர்மானிக்க உள்ளதால் சகல அங்கத்தவர்களும் கலந்துகொள்ளவும்.

**இடம்** : மூளாய் வீதி உடஉளவு விருத்திச்சங்கக் கட்டிடம்
**காலம் :** 18.05.2024 சனிக்கிழமை மு.ப 11.30 மணி

......................
செயலாளர்

(CS 42456) V-1

## மரண அறிவித்தல்



### கதிரவேலு அருட்செல்வம்

யாழ். அச்செழு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அருட்செல்வம் அவர்கள் நேற்று முன்தினம் (13.05.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - ஆச்சிமுத்து தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், வினோதன் (கனடா), நிலானி, தீபா (கனடா), லிபியா (கனடா), லவநீதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதாபன் (இத்தாலி), கஜாஜினி, ரூபாகரன், துவிகரன், யுகதர்ஷன், நிலோஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிநிஷா, அனேகயா, சரவணா, ஹோகுல், நிறோஸ், சஞ்சனா, சபீனா, சன்விகா, சருண், சாஷினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான புஸ்பமலர், புனிதமலர், றஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான இராசரத்தினம், இராசையா, சுந்தரராஜா மற்றும் அமிர்தலிங்கம், இராசலிங்கம், புவனேஸ்வரி, லோகராசா, லோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்செழு, நீர்வேலி.**
**077 605 5543, +164 797 01187** (CR 42455) S-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 • 03 • 1956



மறைவு
30 • 05 • 2020

அமரர்

### ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

*திதி: அஷ்டமி (15.05.2024)*

சுதுமலை அம்மன் கோவிலின்
நிரந்தர தொண்டனாய்
அடியார்களுக்கு அடியவர் ஆனாய்
அம்பாளுக்கு ஓர் அபிராமிப்பட்ட ரானாய்
நான் பார்த்த முதல் முகம்
நான் பேசிய முதல் வார்த்தை
நான் மறக்க முடியாத முதல் ஓவியம் என் தெய்வமே!
நான்கு ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகளைச்
சுமந்தவளாய் இருப்பேன் தெய்வமே!
என் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் தொடரும்
உங்களை என் உள்ளத்தில் வைத்து பூசிப்பேன் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

ஆருயிர் மனைவி
உருத்திரமூர்த்தி பவானி
(ஆசிரியர்)
குமரன், நந்தன், பிரணவன்
பெறாமக்கள்.

சுதுமலை வடக்கு,
சுதுமலை.

(CS/55062) J-1

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண் மகிழ
08 • 09 • 1936



மண் நெகிழ
15 • 04 • 2024

### தம்பு சின்னத்துரை

எம்மோடு இருந்த காலம் போதுமென்றோ சென்றீர்கள்
கண்முன்னே கலங்கரை விளக்காய் வழிகாட்டி நின்றீர்கள்
மண்விட்டு நீங்கள் மறைந்தாலும் - எம் மனதில்
என்றும் பசுமையாய் உங்கள் நினைவுகளுடன்....

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (15.05.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இந் நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 49, சாஸ்திரியார் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(cs. 491) (N-1)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 • 02 • 1950



மறைவு
20 • 05 • 2021

### அமரர் இந்துமதி நடேசு

திதி : வளர்பிறை அட்டமி (15.05.2024)

வைகாசி மாத வளர்பிறை அட்டமித் திதி
தன்னில் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
மூன்று ஆனபோதும் ஈரவிழிகளுடன் இன்றும்
உங்களைத் தேடுகின்றோம் - அம்மா

இல. 381, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/55063) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்னோ வெளியேற்றம்!



**டெல்லி, மே 15**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், டெல்லியிடம் தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியது லக்னோ. இதனால் பிளேஓவ் சுற்றுக்குச் செல்லும் போட்டி பெங்களூர், ஹைதராபாத் மற்றும் சென்னை அணிகளுக்கு இடையே தீவிரமாகியுள்ளது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணிக்கு ஆரம்ப வீரர் ஜக் ப்ரெசர் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றினார். எனினும் போரெல் மற்றும் ஷாய் ஹோப் இருவரும் பலமான அடித்தளத்தை அமைத்து அணியைச் சரிவில் இருந்து மீட்டனர். 27 பந்துகளில் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சாய் ஹோப். அபிஷேக் போரெல் அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். ரிஷப் பண்ட் 23 பந்துகளில் 33 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தார். அதிரடி என்று அவருடைய இன்னிங்ஸில் இருக்கவில்லை. ஸ்ரப்ஸ் கடைசிக் கட்டத்தில் அதிரடியைக் கையிலெடுத்து 25 பந்துகளில் 57 ஓட்டங்களைக் குவிக்க 4 விக்கெட்களை இழந்து 208 ஓட்டங்களைக் குவித்தது டெல்லி.

பந்துவீச்சில் நவீன் உல் ஹக் 2 விக்கெட்களையும், அஸ்ரட் கான் மற்றும் ரவி பிஸ்னோய் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய லக்னோ அணிக்கு முன்வரிசை வீரர்கள் மிகவும் பலவீனமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார்கள். குயின்டன் டிஹொக் 12, ராகுல் 5, ஸ்ரொய்னிஸ் 5, ஹூடா 0 என அடுத்தடுத்து ஆட்டமிழக்க 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்தது லக்னோ. நிக்கொலஸ் பூரன் 27 பந்துகளில் 61 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தினார். அர்ஷட் கான் 33 பந்துகளில் 58 ஓட்டங்களைக் குவித்து போராட்டகரமான இன்னிங்ஸைக் கட்டமைத்தார். முடிவில் 9 விக்கெட்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது லக்னோ. 19 ஓட்டங்களால் வென்றது டெல்லி. (ம)

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி மற்றும் பராமரிப்பு வேலைத்திட்டங்கள் - 2024
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் பராமரிப்பு நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படு கின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036,E-Mail: pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 15.00 மணிவரை 15.05.2024 ஆம் திகதியிலிருந்து 29.05.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் இடத்திலிருந்து 15.05.2024 ஆம் திகதியிலிருந்து 29.05.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு 30.05.2024 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/CF/W/04/2024 | Renovation of Puloppalai sub office division | Council | 1.67 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 25000.00 | 15.08.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/06/2024 | Reconstruction of Murugananthanagar Road | Council | 1.69 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 25000.00 | 15.08.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/10/2024 | Renovation of Muhamalai Sub office Road | Council | 0.84 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 12000.00 | 15.08.2024 |
| NP/14/45(3)/PL/PSDG/W/02/2024 | Renovation work for Kachcharveli Main Road | Maintenance | 0.84 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 12000.00 | 15.08.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 22.05.2024 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(cd24\41)(N1)

# திருகோணமலை – மூதூர் சம்பவம் பேரினவாதத் தீயின் தொடர்ச்சி!

## மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

திருகோணமலை - மூதூரில் அந்தக் கஞ்சியைக் காய்ச்சிக் கொண்டிருந்த பெண்கள் மீது பொலிஸ் தாக்குதல் நடத்தி அராஜகம் புரிந்து கைதுசெய்துள்ளமையானது கொஞ்சமும் ஏற்கத்தகாத செயல் என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்ட ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான தமிழ்மக்களின் வருடாந்த நினைவஞ்சலியின் அடையாளமாக வழங்கப்படுவதே முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியாகும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது ஒரு கட்சிக்கு அல்லது ஓர் இயக்கத்துக்கு உரிய நிகழ்வு அல்ல. ஒட்டுமொத்தமாக முப்பது வருட காலத்தில் இடம்பெற்ற பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்திலும், அதன் உச்சநிலை அழிப்பான முள்ளிவாய்க்காலிலும் கொல்லப்பட்ட பல இலட்சம் தமிழ்மக்களுக்கான துயர் மிகுந்த நினைவேந்தலாகும். இழந்த தமது அன்புக்குரிய உறவுகளை நினைவு கூர்ந்து கொள்ளும் உரிமையும், கடமையும், அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உரிய அடிப்படையான மனித உரிமையாகும். அதில் தலையிடுவதற்கும், அச்சுறுத்திக் குழப்புவதற்கும் பொலிஸாருக்கோ, இராணுவத்தினருக்கோ எவ்வித நியாயப்பாடும் இருக்கமுடியாது. அதற்கு அப்பால் அவர்கள் தலையிட்டுக் குழப்புவதும், பலவந்தம் செய்வதும், கைது செய்வதும் போன்ற செயற்பாடுகள் சிங்களப் பௌத்த பேரினவாத ஒடுக்குமுறைத் திமிர்த்தனத்தின் வெளிப்பாடுகளாகும். இவை போன்ற அடாவடித்தனச் செயற்பாடுகளை அனைத்து மக்களும் கண்டித்து, எதிர்த்து நின்று, தமது நினைவேந்தல்களை முன்னெடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ம-66)

## ST. JOHN'S COLLEGE. JAFFNA VACANCY

**Applications are hereby invited from qualified persons for the following vacancies**

**Teacher-BioSystems Technology for A/L Classes**

**Please send complete CV with photocopies of relevant certificates and the contact details of two non-related referees by registered post to reach us before 31st May 2024 to the address below. Only shortlisted candidates will be called for an interview.**

**The Principal**
**St.John's College**
**Jaffna**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐஸ்...

யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் அண்மையில் இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது இணுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே மேற்படி ஐஸ் போதை தமக்குக் கிடைக்கப்பெற்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதைத் தொடர்ந்தே அந்த வீடு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டபோது, அங்கு ஐஸ் உற்பத்தி இடம்பெற்றுள்ள அதிர்ச்சியான விடயத்தை பொலிஸார் கண்டறிந்தனர். ஐஸ் போதைப்பொருளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இரசாயனங்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருள்கள் என்பனவும் இதன்போது மீட்கப்பட்டுள்ளன. அந்த வீட்டைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நிலையில், அவரையும் இதற்கு முன்னர் கைதான இரண்டு மாணவர்களையும் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

ஐஸ் உற்பத்தி இடம்பெற்றதாகக் கூறப்படும் வீட்டில் கைதான நபர், சந்தேகத்துக்குரிய அறையை பிறிதொருவரே பயன்படுத்தி வந்தார் என்றும் அவருடைய மனைவி தனியார் மருத்துவமனையொன்றில் தாதியாகப் பணிபுரிகின்றார் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். எனவே, தாதியான அந்தப் பெண், இந்தச் சட்டவிரோத செயல்களுக்காக ஆய்வுகூட சாதனங்களை வழங்கினாரா? என்ற கோணத்தில் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பிரதான சந்தேகநபர்களாகக் கருதப்படும் மேற்படி தம்பதியர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்கள் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்டுவருகின்றனர்.

இலங்கையில் இவ்வாறான போதைப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இது இரண்டாவது தடவையாகும். இதற்கு முன்னர் கொழும்பில் இவ்வாறானதொரு இடம் முற்றுகையிடப்பட்டிருந்தது. (அ-ம-26)

## புலிகள்...

ஆதரவுத் தளத்தை மேம்படுத்துகிறது என்பதால் புலிகளுக்கு எதிரான தடையை நீடிப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இன்னும் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்புக்குப் பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக மத்திய அரசு கருதுவதாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

'2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் தோல்விக்குப் பிறகும், விடுதலைப் புலிகள் 'ஈழம்' என்ற கருத்தைக் கைவிடவில்லை என்றும், நிதி சேகரிப்பிலும், ஈழத்துக்காக இரகசியமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. எஞ்சியிருக்கும் புலிகளின் தலைவர்கள் அல்லது அங்கத்தவர்கள் சிதறிய செயற்பாட்டாளர்களை மீண்டும் ஒருங்கிணைத்து உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இந்த அமைப்பினை மீண்டும் எழுப்புவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குழுக்கள், மக்கள் மத்தியில் பிரிவினைவாதப் போக்கைத் தொடர்ந்து வளர்த்து வருவதோடு, இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் விடுதலைப் புலிகளுக் கான ஆதரவுத் தளத்தை மேம்படுத்துகின்றன. இது இறுதியில் இந்தியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டின் மீது வலுவான சிதைவை மேற்கொள்வதற்கான செல்வாக்கைக் கொண்டிருக்கும்' என்றும் இந்திய அரசாங்கத்தின் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

## தமிழர்களின்...

யின மக்களின் ஆதரவு கிட்டும் என்று அடித்துக் கூறியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சிறுபான்மையின மக்களுக்காக ரணில் விக்கிரமசிங்க தற்போது என்ன செய்துள்ளார்? அவரிடம்தான் தற்போது அதிகாரம் உள்ளது. தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் எம்முடன்தான் கூட்டணி வைத்துள்ளன. பேச்சுகள் நடத்தப்படுகின்றன. அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின்போது சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை மறுசீரமைக்கப்படும், நாட்டுக்கு நன்மைபயக்கக்கூடிய வகையில் அது மாற்றப்படும். இதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம-44)

## சிறுநீரகப்...

உடலில் எந்த நோயும் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்ந்த சிறுமியை, சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நோயாளி என நான்கு சக்கர நாற்காலியில் அமர வைத்து யாசகம் எடுத்துவந்த சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- கல்வியங்காடு பகுதியில், சிறுமியொருவரை நான்கு சக்கர நாற்காலியில் அமரவைத்து அவருக்கு சிறுநீரகப் பாதிப்பு உள்ளது என்றும், மருத்துவச் செலவுக்காகப் பணம் தேவை என்றும் தெரிவித்து நபரொருவர் யாசகம் எடுத்து வந்துள்ளார். சந்தேகமடைந்த பொலிஸார் அந்தச் சிறுமியை மீட்டு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவருக்கு உடலில் எந்த நோயும் இல்லை என்றும், பொய்கூறியே அந்தச் சிறுமியைப் பயன்படுத்தி அவர் யாசகம் எடுக்க வைத்துள்ளார் என்பதும் தெரியவந்தது. இதையடுத்து சிறுமியின் தந்தையான 40 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சிறுமி சிறுவர் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என்றும், யாசகத்துக்காகவே யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்தார் என்பதும் மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-ம-26)

## சுமந்திரன்...

வட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கோப்பாயில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சுரேஷ் பிரேமசந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகங்களில் ஒரு செய்தி வெளிவந்திருக்கின்றது. தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடுமாறு உங்களிடம் யாராவது கேட்டார்களா? என்று சுமந்திரனிடம் வினவப்பட்ட இடத்தில், சுமந்திரன் 'ஆம்' என்றும், நான் (சுரேஷ் பிரேமசந்திரன்) அவரிடம் தமிழ்ப் பொதுவேட்பாளர் கோரிக்கையை முன்வைத்ததாகவும், அந்தக் கோரிக்கையைத் தான் மறுத்ததாகவும் சுமந்திரன் தெரிவித்தார் என அந்தச் செய்தி அமைந்துள்ளது.

இந்தத் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை. ஒரு சில மாதங்களுக்கு முன்பாக பொது வேட்பாளர் தொடர்பான கருத்தை அவரிடம் கேட்டிருந்தேன் என்பது மட்டுமே உண்மை. பொது வேட்பாளரது தேவையைப் பற்றி நான் கூறியிருந்தது மாத்திரமல்லாமல் அவரது கருத்தையும் நான் கேட்டிருந்தேன். அந்தப் பேச்சின் போது, பொதுவேட்பாளராக சுமந்திரனை நிற்குமாறோ அல்லது பிறிதொரு வேட்பாளர் தொடர்பிலோ நாங்கள் உரையாடவில்லை. ஆதலால், சுமந்திரனின் கருத்துகள் கற்பனையின் வெளிப்பாடே.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவை என்பதில், ஈ.பி.ஆர்.எல்.எவ். மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் சுமந்திரன் கூறியுள்ள இந்தக் கருத்துகள் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை அர்த்தமற்றுப் போகச் செய்வதற்கான நடவடிக்கையாகவும் பார்க்கவேண்டியுள்ளது. இவ்வளவு ஒரு குறுகிய நோக்கங்களை, சிந்தனைகளைக் கொண்டவராக எவரும் இருக்கக்கூடாது என்பதும் எனது வேண்டுகோளாக இருக்கிறது. ஆகவே நடக்காத அல்லது பேசப்படாத விடயத்தை பேசியது என்று சொல்வது ஏற்புடைய விடயம் அல்ல. குறிப்பாகச் சொல்வதாக இருந்தால் தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுவதற்கு சுமந்திரனை விட தகுதியான, பக்குவமான பலர் கட்சிகளிலும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களாகவும் இருக்கின்றார்கள். இந்தத் தெளிவுபடுத்தலை தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் - என்றார். (அ-ம-100)

## நினைவேந்தல்...

யாகும். அதனை நிராகரிக்கவே முடியாது என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பெருந்தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை, மூதூர் சேனையூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகித்தவர்கள் இரவு நேரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளபின்னணியிலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வைகாசி மாதம் உணர்வுபூர்வமானது. அவர்கள் தமது உறவுகளை நினைவு கூருவதற்கான புனிதமான மாதமாகும். அவர்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதற்கு முழுமையான உரித்துடையவர்கள். அவர்களின் அந்த அடிப்படை உரிமையை யாரும் நிராகரிக்கவேமுடியாது. அவ்வாறு நிராகரிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது. அவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்துவதும், நிராகரிப்பதும் அடிப்படைச் சட்டங்களை மீறுவதாகும்.

திருகோணமலை, மூதூரில் தமது உறவுகளை நினைவு கூர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கல்முனையில் நினைவுகூரல் தடுக்கப்பட்டுள்ளது. இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இவ்விதமான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன். அத்துடன், கைது செய்யப்பட்டவர்கள் தாமதமின்றி விடுவிக்கப்படுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பகிரங்கமான கோரிக்கை விடுகின்றேன். எமது மக்களின் உரிமைகளைக் கடந்த ஏழு தசாப்தமாக பறித்து வருகின்ற நிலையில் தான் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரங்களைப் பகிருமாறு கோரிவருகின்றோம் - என்றார். (அ-ம)

## இறுதிப்போரின்...

வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வீரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

"போரின்போது பெருமளவான மக்கள் கொல்லப்பட்டனர் என்று சிலர் கூறுகின்றனர். 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்று தருஸ்மன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 7 ஆயிரத்து 721 பேரே உயிரிழந்தனர் என்று ஐ.நா. அறிக்கையாளர் கூறியுள்ளார். இதில் புலிகளும் உள்ளடங்குகின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து போர்சார் அதிகாரிகளும் புலிகள் உட்பட 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையானோரே உயிரிழந்துள்ளனர் எனக் கூறியுள்ளனர். எனவே, பெருமளவானோர் கொல்லப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும்.

புலிகள் மக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்தனர். கொலை செய்தனர், இதன்போது தமிழ் அரசியல்வாதிகள் எங்கிருந்தனர்? அதேவேளை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆபத்தானது, அதன் பின்னணியில் சூழ்ச்சி உள்ளது" - என்றார். (அ-ம-44)

## முள்ளிவாய்க்கால்...

படவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இந்த குருதிக் கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆர்வலர்கள் முகாமில் கலந்து கொள்ளமுடியும். (அ-ம)

## இலங்கையின்...

இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி தமிழர்களைக் கௌரவமாகவும், கண்ணியமாகவும், நீதியாகவும் சமபிரஜைகளாகவும் நடத்தவேண்டும். நல்லிணக்கச் செயற்பாடுகளில் இந்தியா நீண்டகாலமாகப் பங்காற்றி வருகிறது. வடக்கு - கிழக்கில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்தியா பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது - என்றார். (ம-6)

**(இன்னொரு செய்தி உள்ளே)**

## கொக்குவில்...

தூக்கத்தில் இருந்த வீட்டார், வீட்டில் யாரோ நடமாடுவதுபோன்று இருந்ததையடுத்து தூக்கத்தில் இருந்து எழும்பிப் பார்த்தாபோது ஒருவர் தப்பித்தோடியுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் அண்மைக் காலமாக ஒரே மாதிரியான திருட்டுகள் இடம்பெறுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தத் திருட்டுகளின் பின்னணியில் ஒரே குழுவைச் சேர்ந்தோரே இருக்க வாய்ப்பிருப்பதாகவும், இது தொடர்பில் பொலிஸார் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொதுமக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு - குறிகட்டுவான் படகு சேவையில் நேரமாற்றம்

யாழ்ப்பாணம், மே15

நெடுந்தீவு-குறிகட்டுவான் இடையேயான கடற்போக்குவரத்து நேர அட்டவணை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குறிகட்டுவான் துறைமுகப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வாரத்தில் திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரையான ஆறு நாளகளும் காலை 6.45 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் வரையும், காலை 8 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு வரையும் 'குமுதினிப் படகு' சேவையில் ஈடுபடும். இதே நாள்களில் மாலை 3 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் வரையும், மாலை 4.15 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு வரையும் 'வடதாரகைப் படகு' சேவையில் ஈடுபடும். இந்த நேர மாற்ற நடைமுறையின் பிரகாரம் 'சமுத்திரதேவா' படகும் ஞாயிற்றுக் கிழமைகளில் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் வரையும், காலை 9.30 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு வரையும், இதே தினத்தன்று பி.ப 2.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் வரையும், மாலை 4 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு வரையும் சமுத்திரதேவா படகு சேவையில் ஈடுபடும். இதே வேளை தனியார் படகான 'கரிகணன்' வழமைபோல சேவையில் ஈடுபடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-66)


## தொழிலாளர் தேவை

கீரிமலை, சேந்தான்குளம் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பொதியிடல் வேலைக்கு ஆட்கள் தேவை.
மதிய உணவுடன் சம்பளம் 1500/-

தொடர்பு:- 077 760 8528

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS-54993) J-1

074 173 7684

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூரடி, ஆனைப்பந்தி, கந்தர்மடம், திருநெல்வேலி, வைமன் வீதி, நாவலர் வீதி ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கு தேவை. (CS 00499) S-1

077 339 2289

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு:
076 116 3919

## தேவை

யாழ்நகரில் போன் Shop க்கு
- விற்பனையாளர்
- வரவேற்பாளர்

சம்பளம் - 30000 - 40000
வயது - 18 - 21
ஆண், பெண் இருபாலாரும்
5km உள்ளே விரும்பத்தக்கது. (CS55070) N-1

தொடர்பு:- 077 199 6117

## காணாமல் போனோர்

## காணவில்லை



**வைத்திலிங்கம் கனகலிங்கம்**

எனும் 82 வயதுடைய, காலில் காயமுள்ள, அதிகம் நடக்க முடியாத வயோதிபர் 12.05.2024 அன்று புங்குடுதீவு மடத்து வெளியில் உள்ள தனது வீட்டின் முன் காணாமல் போயுள்ளார். (G.S பிரிவு J/23) மூப்பின் காரணமாக உள்ள ஞாபக மறதியால் வீடு திரும்ப முடியாமல் அவதிப்படும் நிலையில் இருக்கலாம். வயதின் காரணமாக இவரால் தனிப்பட செயற்பட முடியாது. தயவு செய்து இவரைக் காண்பவர்கள் இவரைப் பற்றிய தகவலை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தரவும். நன்றி

071 999 9306, 074 090 9597
077 888 8603, 076 834 0781

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை. (CS/488) J-1

தொடர்பு :- 077 886 2927

## Classes

வரலாறு - O/L, A/L

தேசிய, மாவட்ட ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான்

குழுவகுப்புகள்
- இடம் : கோலாசிற்றி, 234, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
- காலம் : 18.05.2024 சனிக்கிழமை காலை 8.00 மணி
- ஒருவாரத்தில் 02 வகுப்புகள்

மாதம் 1000/- மட்டும் (cs 55064) (N-1)

T.P: 077 482 5438

P.Lakshan (B.A (History)

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

A/L 2026

தொழில்நுட்பப் பிரிவு
- ஆரம்பம் - 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - காலை 8.30

A/L 2024, 2025
வகுப்புகள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு: 077 017 5346 (cs.21023) (N-1)

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD JAFFNA

2026 A/L கணித உயிரியல் பிரிவுகள்
நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ்மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு. G. பிரபா | MR.M.KUGANESWARAN |
| திரு. N. கபிலன் | MR.R.RAAKULAN |
| திரு. R. ராகுலன் | |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு. G.BENO | MR.G.BENO |
| திரு. V.K.நந்தா | MR.V.K.NANTHA |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு. V.S. குணசீலன் | MR.V.S.GUNASEELAN |
| திரு. K. இராகவன் | |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| திரு. P. செந்தில்நாதன் | MR.P.SENTHILNATHAN |
| திரு. V.S. சிவகரன் | MR.V.S.SIVAKARAN |

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

ஆரம்பம் - 19.05.2024 (Sunday)
நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு- 0765693006, 0765663006, 0777917611
https:// Facebook.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.